**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 12765/E/2019**

திரு A.ஞானேஸ்வரன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சாத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமை ச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 19.06.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 16.08.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 18.12.2019 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு A.ஞானேஸ்வரன் அவர்கள் தனது

சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ரவிச்சந்திரன், பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சாத்தூர் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 19.06.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நென்மேனி கிராமத்தில் வசிக்கும் திரு.V.அருணாச்சலம் ஆசாரி மகன்கள் A.மணிசங்கர் மற்றும் A.ஞானேஸ்வரன் ஆகிய இரண்டு பேருக்கும் பாத்தியப்பட்ட சொத்து காலிமனையின் புல எண்.1423, உட்பிரிவு 22, மேல்முறையீட்டாளரின் வீட்டின் அருகில் காலிமனை உள்ளது என்றும், மேல்முறையீட்டாளரின் காலிமனை இடத்தை 60 ஆண்டுகளாக அனுபவித்துக்கொண்டு வருவதாகவும், மேல்முறையீட்டாளர் அனுபவத்து வரும் காலிமனை இடத்தை மேல்முறையீட்டாளருக்கு தெரியாமல் சொத்தை அபகரித்து மோசடி செய்து நென்மேனி கிராமத்தை சேர்ந்த கருப்பையா ஆசாரி மகன் நாகராஜ் பெயரில் சாத்தூர் வட்டாட்சியர் அவர்கள் காலிமனைப்பட்டா வழங்கியுள்ளதாகவும், நாகராஜ் பெயரில் பட்டா வழங்கியதற்கு அவர் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களின் நகல் உள்ளிட்ட தகவல்களாகக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், சாத்தூர் தாலுக்கா, சாத்தூர், விருதுநகர் மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 06.06.2019 மற்றும் 01.10.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 16.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / விருதுநகர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், விருதுநகர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 18.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே தகவல் வழங்கப்பட்டு, மேல்முறையீட்டாளரும் ஆவணங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்து நகல் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்துள்ள, 02.11.2020 ஆம் நாளிட்ட ஒப்புதலை (உரிய ஆவணங்களை) புலனம் (Whatapp) மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்குப் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின்

மீது மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 12765/E/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சாத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு A.ஞானேஸ்வரன்,
த/பெ. V.அருணாசலம் ஆசாரி,
எண்.9/1, ராமமூர்த்தி தெரு,
இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை - 600 053.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*